சுருக்கம்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் – 2012–2013–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – செக்கானூரணியில் அரசு கள்ளர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தொடங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை

அரசாணை (நிலை) எண்:01

நாள்:07.01.2013
நந்தன ஆண்டு
மார்கழி 23
திருவள்ளுவர் ஆண்டு – 2043

படிக்கப்பட்டவை:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.பி1/9629/2008, நாள் 14.05.2012 மற்றும் 26.06.2012.

*******

ஆணை:

10.05.2012 அன்று நடைபெற்ற இத்துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது பதிலளித்து பேசிய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலம் செக்கானூரணியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று ரூ.2.22 கோடி செலவில் தொடங்கப்படும் என்ற அறிவிப்பினை சட்டமன்றப் பேரவையில் வெளியிட்டார்கள்.

2. மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், மதுரை மாவட்டம், செக்கானூரணியில் உள்ள அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து 6 முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் பெண்களை பிரித்து தனியே அரசு கள்ளர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தொடங்கவும், அப்பள்ளிக்கு ஒரு மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடம், ஒன்பது முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், ஐந்து பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், ஒரு இளநிலை உதவியாளர் பணியிடம், ஒரு பதிவுரு எழுத்தர் பணியிடம், ஒரு அலுவலக உதவியாளர் பணியிடம், ஒரு காவலர் பணியிடம் மற்றும் ஒரு துப்புரவாளர் பணியிடம் என மொத்தம் 20 புதிய பணியிடங்களை ரூ.2,58,94,560/– செலவினத்தில் தோற்றுவிக்கவும் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது.

i) செக்கானூரணியில் ஏற்கனவே இயங்கிவரும் அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து 6 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் பெண்களை தனியே பிரித்து அரசு கள்ளர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தோற்றுவிக்கப்படுகிறது.

ii) பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கென கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ.2.02 கோடியும், பள்ளிகளுக்கு தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு ரூ.20.00 இலட்சமும் தொடரா செலவினமாக ஒப்பளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3(ii)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்றுவைக்கப்படவேண்டும்:-

<u>பள்ளிக் கட்டிடம் கட்டுதல் (ரூ.2.02 கோடி)</u>

"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட பணிகள் II மாநிலத் திட்டம் – JZ – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்லக் கட்டடங்கள் கட்டுதல் – 16 – பெரும்பணிகள்". (த.தொ.கு. 4225–03–277–JZ–1601)

<u>பள்ளி தளவாடச் சாமான்கள் வாங்குதல் (ரூ.20.00 இலட்சம்)</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்– 80 பொது –101– சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன்–I திட்டத்தில் சேராதது – AE சீர்மரபினர் பள்ளிகள்– 19 இயந்திரமும் சாதனமும் – 01 – வாங்குதல். (த.தொ.கு. 2225–80–101–AE–1917)

5. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் பள்ளிகளின் கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறையிடம் ஒப்படைவு செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) கட்டுமானப் பணிகள் குறித்து மேலே பத்தி 3(ii)–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3(ii)–ல் பள்ளி தளவாடச் சாமான்கள் வாங்குவது குறித்து ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தினை மேற்கொள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையருக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

7. செக்கானூரணியில், அரசு கள்ளர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கான கட்டடப் பணிகள் முடிவுற்றப் பிறகு பள்ளி செயல்படத் துவங்கும் முன் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிப்பது தொடர்பாக ஏற்படக் கூடிய தொடரும் செலவினம் குறித்து உரிய நேரத்தில் நிதி ஒப்பளிப்பு கோரி அரசுக்கு தனியே கருத்துரு அனுப்பும்படி மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இது ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் கிடைக்கும்வரை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கும் ஆணைகள் நிதி(வ.செ–I)துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத்தை பெறுவதற்கு உரிய படிவத்தை பூர்த்தி செய்து நிதி(வ.செ–I)துறைக்கு அனுப்பி பெற்று கொள்ளுமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்தை 2012–2013–ம் ஆண்டு துணை மானியக்

கோரிக்கையில் சேர்த்திட உரிய முன்மொழிவினை நிதி(வ.செ.பொ-I)த்துறைக்கு அனுப்புமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.58512/பி,மிபி/2012, நாள் 26.10.2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1392 (ஆயிரத்து முந்நூற்று தொண்ணூற்று இரண்டு)–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தங்க கலியபெருமாள்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்,
சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப் பணித்துறை, சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18/பெயரில்.
மாநில கணக்காயர், (தணிக்கை–1) சென்னை–18/(பெயரில்).
மாநில கணக்காயர், (தணிக்கை–II) சென்னை–18/(பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு), சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை–20.
மாவட்ட ஆட்சியர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல்.
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை–20.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல்.
கருவூல அலுவலர், தேனி மற்றும் திண்டுக்கல்

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்,
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், நிதித்துறை, சென்னை–9.
செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
நிதி(பிமிபி/வரவு–செலவு(பொது I மற்றும் II)/
மை.ம.ஆ.பி.(CMPC)துறை,சென்னை–9.
பொதுப்பணி (ஒப்2)துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு /உபரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்